Koviloor Digital Library

செந்திற் பத்து



4360
Δ2,11(...)

காரைக்குடி அரு. பெரி. மெ. தெ. மகன்

மெய்யப்பன்

திருமண அன்பளிப்பு:

திருமண நாள்:

தாது - ஆவணி 03 19-08-1996

Koviloor Digital Library



Koviloor Digital Library

3-6

உ
சிவமயம்



வரவேற்பு



4360
Δ2,11

சான்றோர்களே!

வணக்கம். வருக வருக உங்களை எங்கள் மெய்யப்ப மாமா திருமணத்திற்கு வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

எங்கள் அன்பு ஐயா, ஆயா சிறந்த முருக பக்தர்கள். கந்தர் சஷ்டி நாள்களில் திருச்செந்தூரிலோ அல்லது கோலாலம்பூரிலோ முருகன் திருமுன் அவர்கள் இருப்பார்கள்.

எங்கள் அன்பு அன்னையின் திருமணத்தில் திருப்புகழ்த் திரட்டை அன்பளிப்பாக வழங்கினார்கள்.

இன்று எங்கள் அருமை அம்மான் திருமணத்தில் திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்த் தொகுப்பு அன்பளிப்பாக வெளிவருகின்றது. எங்கள் அன்பு ஐயாவின் மலேசிய உழுவலன்பர் தொகுத்தது இந்நூல். அந்நாருக்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

ஆறுமுகன் திருவருளால் இப்பாக்களை நாள் தோறும் பக்தியுடன் படித்து நன்மைகள் பல பெறுவோமாக.

அன்பு அம்மானின் அருமை மருகர்கள்,
மு. அழகப்பன்
மு. தெய்வராயன்

Koviloor Digital Library

KOVILOOR MADALAYAM

உ

சிவமயம்

செந்திற் பத்து



பகழிக்கூத்தர் என்னும் வைணவரால் 18-ஆம் நூற்றாண்டின் முதற்பகுதியில் (1) பாடப்பெற்ற நூல், திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் என்று கூறப் பெறுகிறது. ஆண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை (வாரானை) அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னும் பத்துப் பருவங்களுக்கும் நூறு பாடல்களைக் கொண்டு இந்நூல் அமைந்திருக்கிறது.

அவற்றிலிருந்து ஒரு பருவத்திற்கு ஒரு பாடலாகப் பத்துப் பாடல்களும், நூற்பயன் ஒரு பாடலுமாகப் பதினொரு பாடல்கள், அரும்பதவுரையுடன் இங்கு தொகுத்துத் தரப்பெற்றுள்ளன.

காரைக்கால் அம்மையார், திருஞானசம்பந்தப் பெருமான், மற்றும் ஆழ்வார் பெருமக்கள் பாடியுள்ள திருப்பதிகங்கள், அந்தந்தத் தலத்து இறைவன் மீதான பத்துப் பாடல்களையும், பதிகப்பலன் கூறும் ஒரு பாடலையும் கொண்டு இலங்குவதை அனைவரும் அறிவர்.

திருமுறைகளில் தீவிர நம்பிக்கை கொண்டு, தினமும் திருமுறைப் பாராயணம் செய்துவரும் தெய்வராயன் அவர்கள், திருச்செந்தூர் முருகனிடத்துத்

Koviloor Digital Library 3-6

தீராத காதல் கொண்டவர்; பக்தி பூண்டவர். எனவே, திருமுறைகள், திவ்வியப் பிரபந்தங்களின் அடிப்படையில், திருச்செந்தூர் முருகன் மீதான பிள்ளைத் தமிழிலிருந்து பதினொரு (பத்து + ஒன்று) பாடல்களைத் திரட்டிச், செந்திற் பத்து என்னும் சிறு நூலாக்கித் தம் அரும்பெறற் புதல்வரின் திருமண நாளில் வழங்குவது ஏற்புடையதே.

வயிற்றுவலியால் துன்புற்ற பகழிக்கூத்தர், திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் பாடி, நோய் அகலப் பெற்றதோடு, முருகனிடமிருந்து மாணிக்கப் பதக்கத்தையும் பெற்றார்(2) என்று கூறப்பெறுவதால், இந்தப் பிள்ளைத்தமிழ்ப் பாடல்களை முறையாகப் பாராயணம் செய்வோர், நோய் - நொடியின்றி, இம்மை - மறுமைப் பயன்களைப் பெற்று இனிது வாழ்வர் என்று உறுதியாகக் கூறலாம்.

இறையன்பர்கள் இப்பாடல்களை நாள்தோறும் ஓதிக், கலியுகவரதனான கந்தவேளின் கருணைக்குப் பாத்திரராகக் கோருகிறோம்.

சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்குக.



---

(1) தமிழ் இலக்கிய அகராதி

(2) அபிதான சிந்தாமணி

Koviloor Digital Library

உ

சிவமயம்

செந்திற் பத்து

1. காப்புப் பருவம்

விநாயகர்

கருணையின் வழிபடு முதியவள் தனை,உயர்
கயிலையில் ஒருமுறை உய்த்த விதத்தினர்,
கனவட கிரிமிசை, குருகுல மரபினர்
கதைதனை எழுதிமு டித்த கருத்தினர்,
கலைமதி யினை,இரு பிளவுசெய்(து), ஒருபுடை
கதிர்எழ நிறுவிய ஒற்றை மருப்பினர்,
கடுநுகர் பரமனை வலமுறை கொடு,நிறை
கனிகவர் விரகுள புத்தி மிகுத்தவர்.

பொருவரும் இமகிரி மருவிய பிடிபெறு
பொருகளி(று) என,மிகு பொற்பு விளைத்தவர்,
பொதிஅவிழ் நறுமலர் அணைமிசை, தம(து)உடல்
புளகம(து) எழ,ஒரு சக்தி தரித்தவர்,
பொதுவற விடுசுடர் முழுமணி ஒளிவிடு
பொலிவெழு பவளம தித்த நிறத்தினர்,
புகர்முகம் உடையவர், குடவயி(று) உடையவர்
புகழ்,இரு செவியில்நி றுத்தி, வழுத்துதும்;

Koviloor Digital Library 3-6

குறிப்புரை

1. காப்புப் பருவம்:

பிள்ளைத்தமிழ் பாடும்போது, இரண்டாம் மாதத்தில், பிள்ளையைக் காக்க என்று விநாயகர் முதலான பல கடவுளரைப் பாடுவது காப்புப் பருவம் எனப்பெறும். இங்கு விநாயகர் மீதான காப்புச் செய்யுள் இடம் பெறுகிறது.

வழிபடு முதியவள் - வழிபட்ட வயோதிகப் பெண்ணான (மூதாட்டியான) ஔவையார்; உய்த்த - சேர்ப்பித்த; கன - பெருமை மிகுந்த; வடகிரிமிசை - வடக்கே உள்ள மேரு மலையில்; குரு குல மரபினர் கதை – கௌரவ பாண்டவர்களின் வரலாறான பாரதம்; ("கனவட ..... கருத்தினர்" – "முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில் முற்பட எழுதிய முதல்வோனே" என்பது திருப்புகழ்) கலைமதி – பிறைச் சந்திரன்; புடை – பக்கம்; கதிர் – ஒளி; மருப்பு – கொம்பு; (பிறைச் சந்திரனை இரண்டாக்கி, ஒரு பகுதியை ஒருபுறம் ஒளி வீசும் தந்தமாக்கிக்கொண்டது போன்றவர்); கடுநுகர் - கொடிய ஆலகால நஞ்சினை உண்ட; வலமுறை கொடு - வலம் வந்து; கனி கவர் – மாங் (மாதுளங்) கனியைப் பெற்றவர்; ("தந்தைவலத் தால்அருள்கைக் கனியோனே" என்பர் அருணகிரியார்.); விரகு – நுட்பம்; பொருவரும் – ஒப்பற்ற; இமகிரி – இமயமலை! பிடி – பெண் யானை, (பார்வதி); பொற்பு – அழகு, பொலிவு, தன்மை; பொதி அவிழ் – மலரும் பருவத்திலுள்ள மலர், (அரும்பு); அணைமிசை – இருக்கையிடத்து; புளகம் – மகிழ்ச்சி; பொலிவு – அழகு; புகர் முகம் – யானை (முகம்); குடவயிறு - பானை போன்ற வயிறு;

Koviloor Digital Library

இருமையும் உதவிய சிவபர சமயமும்,

இமையவர் உலகும்அ ளித்த களிப்டனை,

இசைமுரல் மதுகரம் முறைமுறை பெடையுடன்

இடறிய முகைவிரி செச்சை வனட்பனை,

இளகிய புளகித மலைமுலை அரமகள்

இகலிய புலவி.அ கற்று மழுப்பனை,

இகல்புரி பரநிசி சரர்குல கலசனை,

எனைவழி அடிமைப டைத்திடு நட்பனை,

அருமறை உரைதரு பிரமனை. அமரரும்

அடிதொழ, விடுசிறை விட்ட திறத்தனை,

அடியவர் கொடுவினை துகள்பட, நடம்இடும்

அழகிய சரணம் அளித்த வரத்தனை,

அளவறு கலவியின் முழுகிய குறமகள்

அழகினில் ஒழுகி,இ ருக்கு மயக்கனை,

அலைஎறி திருநகர் மருவிய குமரனை,

அறுமுக முருகனை நித்தல் புரக்கவே (4)

Koviloor Digital Library

வழுத்துதல் – துதித்தல்; இருமை – இம்மை மறுமை; களிப்பன் – களிப்பினை உடையவன்; முரல் - ஒலித்தல்; மதுகரம் – ஆண் வண்டு; பெடை – பெண் (வண்டு); இடறிய முகைவிரி – உழக்குதலால் (மலரும் பருவத்திலுள்ள) அரும்பு விரிகின்ற; செச்சை வனப்பன் – வெட்சி (மாலை அணிந்த) அழகன்; புளகிதம் - மயிர்ச் சிலிர்ப்பு, மகிழ்ச்சி; அரமகள் – தெய்வப்பெண், (தெய்வயானை); இகலிய – மாறுபடுகின்ற; புலவி – ஊடல், பிணக்கம்; அகற்று மழுப்பன் – நீக்குகின்ற இங்கித நயம் பேசுபவன்; இகல் – போர்; பர - பகைவர் (ஆன), அந்நியர் (ஆன); நிசிசரர் – அசுரர், இராக்கதர், இரவில் இயங்குவோர்; கலகனை – கலங்கச் செய்தோனை; நட்பனை – நண்பனை! அருமறை – அரிய மறை (வேதம்); (''அருமறை திறத்தனை'' – பிரணவத்தின் பொருள் அறியாப் பிரமனைச் சிறையில் இட்டுப் பின்னர் விடுவித்த முருகப் பெருமானின் திறம் கூறப்பெறுகிறது.); கொடுவினை - கொடிய வினை; துகள்பட - பொடியாக; சரணம் – புகலிடம், அபயம், பாதம்; வரத்தன் - வரம் அருளத் தக்கோன்; அளவறு- அளவில்லாத; கலவி – புணர்ச்சி, கலப்பு; குறமகள் – குறப்பெண்ணான வள்ளி நாச்சியார்; ஒழுகி – ஈடுபட்டு; மயக்கன் - மயக்கமுடையவன்; அலை எறி திருநகர் – கடல்அலை மோதுகின்ற திருச்செந்தூர்; மருவிய - பொருந்திய; நித்தல் – தினந்தோறும்; புரத்தல் - காத்தல்.

(செந்தில்நகர்ச் சேவகனைச் சந்ததமும் காக்க என்று, ஔவையைக் கயிலையில் சேர்த்த - பாரதம் தீட்டிய - தந்தை வலத்தால் கனி கவர்ந்த தந்திமுகனை வழுத்துவோம்.)

*

Koviloor Digital Library

2. செங்கீரைப் பருவம்

மகரசல ராசிதனில், வருணன் வந்(து) அடிபரவி
வைத்தமணி முத்து மாலை,
வடபூ தரத்தில்விழும் அருவிஎன, உத்தரிக
மார்பில்ஊ டாட, மன்னும்

தகரமலர் இதழ்முருகு கொப்புளிக் கும்சிகைத்
தமனியச் சுட்டி ஆடத்:
தவளமுழு மதிஅமுத துளிஎனத், திருமுகத்
தரளவெயர்(வு) ஆட. முழுதும்

பகரவரு மறைமுனிவர் கொண்டாட, மழுவாளி
பங்காளி திருமு லைப்பால்
பருகக் குழைந்து,சிறு பண்டியும், தண்டையும்
பாதமும் புழுதி ஆடச்,

சிகரவரை அரமகளிர் சிறுமுறுவல் ஆட,நீ
செங்கீரை ஆடி அருளே,
செந்நிறக் குடுமி,வெண் சேவற் பதாகையாய்!
செங்கீரை ஆடி அருளே. (16)

*

Koviloor Digital Library

2. செங்கீரைப் பருவம்:

ஐந்தாம் திங்களில் நிகழ்வது செங்கீரை ஆடுதல் - அதாவது, ஒரு காலை மடக்கி, ஒரு காலை நீட்டி, இரு கைகளையும் நிலத்தில் ஊன்றித், தலை நிமிர்த்தி, முகம் அசைய ஆடுதல்.

மகரம் - சுறாமீன் (களை உடைய); சலராசி - கடல் பரவி - வணங்கி; வடபூதரம் - வடக்கே உள்ள மலை, மேரு; உத்தரிக மார்பு - மேலாடை தரித்த மார்பு; ஊடாட - இடையில் தவழ; தகரம் - மயிர்ச்சாந்து, மணம், முருகு - வாசனை; கொப்புளிக்கும் - பொங்கும்; தமனியம் - பொன்; தவளம் - வெண்மை; தரள வெயர்வு ஆட - முத்துப் போன்ற வியர்வை உண்டாக; மழுவாளி பங்காளி - மழுப்படையைத் தாங்கும் சிவனுடைய செம்பாதியைப் பங்காகக் கொண்ட உமாதேவி; பண்டி - வயிறு; புழுதி ஆட - தூசி படிய; சிகரவரை - மலை உச்சி, மலை முகடு; அர மகளிர் - தெய்வப் பெண்கள், தேவலோகப் பெண்கள்; குடுமி - கொண்டை(யை உடைய); பதாகையாய் - (சேவற்) கொடியை உடையவனே; (''செந்நிறக் . சேவல்'' - சேவலின் கொண்டை நிறச் சிவப்பும், உடலின் வெண்மையும் கூறப் பெறுகின்றன)

(அழகிய உடலில் அணிகலன்கள் அசைந்தாட, அரமகளிர் புன்முறுவல் பூக்கச், சேவற்கொடி யோய்! செங்கீரை ஆடி அருள்க.)



Koviloor Digital Library

3. தாலப் பருவம்

பாம்பால் உததி தனைக்கடைந்து,
படரும் கொடும்கார் சொரிமழைக்குப்,
பரிய வரையைக் குடைகவித்துப்,
பசுக்கள் வெருவிப் பதறாமல்,

காம்பால் இசையின் தொனி அழைத்துக்,
கதறும் தமரக் காளிந்திக்
கரையில், நிரைப்பின் னேநடந்த
கண்ணன் மருகா! முகைஉடைக்கும்

பூம்பா சடைப்,பங் கயத்தடத்தில்,
புனிற்றுக் கவரி முலைநெரித்துப்
பொழியும் அமுதம் தனைக்கண்டு,
புனலைப் பிரித்துப், பேட்(டு)எகினம்

தீம்பால் பருகும் திருச்செந்தூர்ச்
செல்வா! தாலோ தாலேலோ,
தெய்வக் களிற்றை மணம்புணர்ந்த
சிறுவா! தாலோ தாலேலோ. (24)

*

Koviloor Digital Library



3. தாலப் பருவம்:

தாலாட்டைக் கேட்கும் பருவம். இது ஏழாம் மாதத்தில் நிகழ்வது.

பாம்பால் – அட்ட (8) நாகங்களில் ஒன்றான வாசுகி என்னும் பாம்பினால் (அட்டமா நாகங்கள்; அநந்தன் (ஆதிசேஷன்), வாசுகி, தக்ஷகன், கார்க்கோடன் (சிவமூர்த்தியின் திருவிரலில் மோதிரமாய் இருப்பவன்), பதுமன், மகாபதுமன் (குபேர திசைக் காவலன்), சங்கபாலன், குளிகன்; உததி – கடல் (''பாம்பால் .. கடைந்து'' – தேவர்கள், அசுரருடன் பெரும்போர் புரிந்து மடிந்ததால், மடியாதிருக்க விரும்பித், தேவர், பூமி தாழியாக, மந்தரம் மத்தாகச், சந்திரன் தறியாக, வாசுகி நாணாகக் கொண்டு பாற் கடலைக் கடைந்தனர் அப்போது மந்தரகிரி கடலினுள்ளே அழுந்திவிடாமல் இருக்கத் திருமால் பெரியதோர் ஆமை (கூர்மாவதாரம்) வடிவு எடுத்து, அம்மலையின் கீழே சென்று அதனைத் தம் முதுகில் மீது தாங்கினர் என்பது புராணம். ''வங்கக் கடல்கடைந்த மாதவனை'' – (திருப்பாவை)– கப்பல்கள் ஓடும் கடலைக் கடைந்து அமரர்க்கு அமுதம் ஈந்த மாதவனை! என்று, இந்த வரலாற்றினைச் சூடிக் கொடுத்த நாச்சியார் பாடுகிறார்; ''அடைந்திட்ட அமரர்கள் ஆழ்கடல்தன்னை, மிடைந்திட்டுமந்தரம் மத்தாகநாட்டி, வடம்சுற்றி வாசுகிவன்கயிறாக, கடைந்திட்டகைகள் '' – தன்னைத் தஞ்சம் அடைந்த தேவர்களின் பொருட்டு, ஆழமான பாற்கடலை, மந்தரமலையை மத்தாக நட்டு, வாசுகியாகிய பாம்பை கடைகயிறாகச் சுற்றி, அமிர்தம் பெறக் கடைந்தருளிய கைகள் என்று பெரியாழ்வார் (திருமொழி) பாடி மகிழ்கிறார்); படரும் – பரவுகின்ற; கார் – கரிய (நீர் கொண்ட) மேகம்; சொரிதல் – பெய்தல், பொழிதல்;

Koviloor Digital Library

பரிய வரை – பெரிய (விசாலமான) மலை; கவித்து – பிடித்து ("படரும் கவித்து" – தனக்குச் செய்ய வேண்டிய விழாவை நிறுத்தியதால் கோபம் கொண்ட இந்திரன், தன்னுடைய ஆணைக்கு உட்பட்ட ஏழு மேகங்களை ஏவி, ஏழு நாட்களுக்கு இடைவிடாமல் கல்மழை பெய்யச் செய்தபோது, கோவர்த்தனம் என்னும் மலையைக் குடையாகப் பிடித்து ஆயர்பாடியில் உள்ளோரைக் கண்ணன் காத்த வரலாறு. "குன்றம் ஒன்று எடுத்து ஏந்தி மாமழை அன்றுகாத்த அம்மான்" (பெரிய திருமொழி) என்று திருமங்கையாழ்வார் இந்நிகழ்வினைப் பாடுவார்.); வெருவி – அஞ்சி; காம்பால் – மூங்கிற் குழாய்; தொனி – ஒலி; காளிந்தி – யமுனை ஆறு; நிரை - பசுக் கூட்டம்; முகை உடைக்கும்- மலரும் பருவத்து (த் தாமரை) மொட்டு மலரும்; பாச(அ)டை - பச்சை இலை; பங்கயத் தடம்– தாமரைக் குளம்; புனிற்றுக் கவரி – இளமையான எருமைகள்; முலை நெரித்து – பால் மடியின் காம்புகள் கட்டு விட்டு; அமுதம் – அமிர்தம். இங்குப் பால்; புனல் – நீர்; பேட்டு எகினம் – பெட்டை அன்னம்; தீம்பால் - இனிய பால்; (பாலுடன் கலந்துள்ள நீரைப் பிரித்துப், பாலை மட்டும் பருகும் இயல்புடையது அன்னப் பறவை என்பர்.) தெய்வக் களிறு – தெய்வயானை அம்மை.

(ஆயர்பாடியில் ஆடிப்பாடித் திரிந்த மருகா! கண் வளராய்.)

❋

Koviloor Digital Library



Koviloor Digital Library

4. சப்பாணிப் பருவம்

முதுமொழி நினைவுதெ ரிந்த நாவலர்
முட்டா(து) உனைப்பு கழவே,
முளரியில் மருவிஇ ருந்த நான்முகன்,
முக்கா லும்இச்சை சொலவே,

புதுமலர் சிதறிய கிழ்ந்து, வானவர்
பொற்றா ளினைப்ப ரவவே,
புகலரும் இசைதெரி தும்பு(ரு) ஆதியர்,
புக்(கு)ஆ தரித்து வரவே,

மதுகரம் இடறிய தொங்கல் மாலிகை,
மற்பூத ரத்(து)அ சையவே,
மணிஒளி வயிரம் அலம்பு தோள்வளை
மட்டாய் நெருக்கம் உறவே,

சதுமறை முனிவர்கள் தங்கள் நாயக!
சப்பாணி கொட்டி அருளே,
சரவண பவ!குக! செந்தில் வேலவ!
சப்பாணி கொட்டி அருளே. (40)

*

Koviloor Digital Library

4. சப்பாணிப் பருவம்:

ஒன்பதாம் திங்களில் நிகழ்வது. இரு கைகளையும் ஒன்று சேர்த்துக் கொட்டுவது சப்பாணி கொட்டுதலாம்.

முதுமொழி - பழஞ்சொல், மறைமொழி, அறிவுரை; நாவலர் - நாவன்மை உடையவர், புலவர், அறிஞர்; முட்டாது - குறைவுபடாது; முளரி - தாமரை. (முள்ளை உடைய தண்டைக் கொண்டது.); முளரி . நான்முகன் - தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன், (நான்முகன்); இச்சை - விருப்பம், ஆசை, உறுதிச் சொல்; சிதறி - தூவி; புகலரு - கூறுதற்கரிய; தும்புரு - காந்தருவரான இவர் இசையில் வல்லவர். இவர் செய்த நூல் தும்புரீயம் எனப்பெறும் என்பர்; ஆதியர் - ஆகியோர்; ஆதரித்து - விரும்பி; மதுகரம் - (ஆண்); வண்டு; தொங்கல் மாலிகை - தொங்குகின்ற பூமாலை; மற்பூதரம் - (மல்பூதம்) மற்போர் செய்கின்ற தோளாகிய மலையிடத்து; அலம்பு - நிறைந்த தோள்வளை - தோளில் அணியும் கங்கணம்; சதுமறை நான்கு வேதங்கள். (இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் ஆகிய இந்த நான்கையும் வகைப் படுத்தியவர் வேத வியாசர் ஆவர்.); சப்பாணி - இரு கைகளையும் கூட்டி.

(விண்ணோரும், மண்ணோரும் விரும்பித் துதிக்கச், சரவணபவனே! சப்பாணி கொட்டி அருள்க.)



Koviloor Digital Library

5. முத்தப் பருவம்

கத்தும் தரங்கம் எடுத்(து)எறியும்
கடுஞ்சூல் உளைந்து, வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து, வாலுகத்தில்
கான்ற மணிக்கு விலைஉண்டு,

தத்தும் கரட விகடதட
தந்திப், பிறைக்கூன் மருப்பில்விளை,
தரளம் தனக்கு விலைஉண்டு,
தழைத்துக் கழுத்து வளைந்த,மணிக்

கொத்தும் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலைஉண்டு,
கொண்டல் தரு,நித் திலம்தனக்குக்,
கூறும் தரம்உண்(டு), உன்கனிவாய்

முத்தம் தனக்கு விலைஇல்லை,
முருகா! முத்தம் தருகவே,
முத்தம் சொரியும் கடல்அலைவாய்
முதல்வா! முத்தம் தருகவே. (41)

*

Koviloor Digital Library

5. முத்தப் பருவம் :

குழந்தையை முத்தம் தருமாறு பெற்றோர் முதலியோர் வேண்டும் பருவம் இது. பதினொராந் திங்களில் நிகழ்வதாகப் பாடப் பெறுவது.

கத்தும் - முழங்கும், ஒலிக்கும்; தரங்கம் - அலை; கடுஞ்சூல் - கடுமையான கருப்பம், நிறை கர்ப்பம்; உளைந்து - வருந்தி; வலம்புரி - வலம்புரிச் சங்கு; (''வருந்தக் காண்பது சூல்உளை சங்கு'' (திருக்குற்றாலக் குறவஞ்சி) - துன்பப்படுவதாகக் காணக்கிடப்பன, கருவற்று அதனால் முத்துகளை ஈன வருந்துகின்ற சங்குகளே என்று, குறி சொல்லும் குறத்தி, தன் நாட்டின் பெருமையைப் பறை சாற்றுவதாகத் திரிகூட ராசப்பக் கவிராயர் பாடுவார்.); வாலுகம் - (கடற் கரையில் உள்ள) வெண்மணல்; கான்றமணி - சொரிந்த (வெளிப்படுத்திய, ஈன்ற) முத்து; தத்தும் - அடி மேல் அடி வைத்தல்; கரடம் - மதம்; விகடம் - உன்மத்தம், விகடக்கூத்து; தடதந்தி - மலை(போன்ற) யானை; பிறைக்கூன் மருப்பு - பிறைச் சந்திரன் போன்று வளைந்த கொம்பு, (தந்தம்); தரளம் - (விளையும்) முத்து; மணிக்கொத்து - நெற்கதிர்; சாலி - செந்நெல்; முத்தினுக்கு - நெல்மணிக்கு; தரம் - தகுதி, மேன்மை; கனிவாய் முத்தம் - (உன்னுடைய) கொவ்வைக் கனி போன்ற வாயின் முத்தம்; முத்தம் (15 ஆவது வரி) - முத்து.

(இயற்கையில் கிடைக்கும் எல்லா முத்துக் களையும் விலை மதிப்பிட்டு விடலாம்; விலை மதிக்க முடியாத உன் பவளவாய் முத்தத்தை முருகா! எனக்கு அருள்வாய்.)



Koviloor Digital Library

6. வாரானைப் பருவம்

''பேரா தரிக்கும் அடியவர்தம்
பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும்
பேறும் கொடுக்க வரும்,பிள்ளைப்
பெருமாள் என்னும் பேராளா!

சேரா! நிருதர் குலகாலா!
சேவற் கொடியாய்! திருச்செந்தூர்த்
தேவா! தேவர் சிறைமீட்ட
செல்வா!'' என்(று)உன் திருமுகத்தைப்

பயரா மகிழ்ந்து, முலைத்தாயர்
பரவிப் புகழ்ந்து, விருப்புடன், ''அப் -
பா!வா, வா!''என்(று), உனைப்போற்றப்,
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்,

வாரா(து) இருக்க வழக்(கு)உண்டா?
வடிவேல் முருகா! வருகவே,
வளரும் களபக் குரும்பைமுலை
வள்ளி கணவா! வருகவே. (60)



Koviloor Digital Library

6. வாரானைப் பருவம்:

இதனை வருகைப் பருவம் என்னும் சொல்வதுண்டு. நடக்கும் பருவத்துக் குழந்தையைத், தம்பால் நடந்து வருமாறு, தாய் தந்தையர் முதலியோர் வேண்டுதல் இது பதின்மூன்றாம் மாதத்தில் நிகழ்வதாகக் கூறுவர்.

பேராதரிக்கும் - உன் பெயரைச் சொல்கின்ற, உன்னிடத்துப் பேரன்பு பூண்ட; பேறு - வரம், செல்வம், அடையத்தக்கது; பிள்ளைப் பெருமான் - இளைய பெருமான், (கணபதிக்கு இளையவன்); பேராளா - பெயரை உடையவனே. பெருமை பூண்டவனே; சேரா- சேராது, எதிர்த்து நிற்கும்; நிருதர் - அசுரர்; குலகாலன் - குலத்தினைக் கலங்கச் செய்பவன், குலத்துக்குக் காலன் போன்றவன்; பாரா - அன்பு காட்டி, பார்த்து; முலைத் தாயர் - பாலூட்டும் தாய்மார், (இங்குக் கார்த்திகை மகளிர்); (தாயர் - தாய் என்பதன் பன்மை); பரவி - மிகவும், வாழ்த்தி; பரிந்து - அன்புடன், பக்குவத்துடன்; வழக்கு - செயல், முறை, வழக்கம்; களபம் - கலவைச் சாந்து (அணிந்து); குரும்பை முலை - தென்னை, பனை முதலியவற்றின் இளங்காய் போன்ற மதர்த்த முலை.

(அடியார்க்கு அருள்புரியும் அண்ணலே! என்னிடம் வர, ஏன் இன்னும் தாமதம்?)



Koviloor Digital Library

7. அம்புலிப் பருவம்

கலையால் நிரம்பாத கலைஉண்(டு) உனக்கு,நிறை
கலைஉண்(டு) இவன்தனக்குக்,
களங்கம்அரு(கு) உற,மான் உனக்(கு)உண்டு, குறமான்
கருத்(து)உண்(டு) இவன்தனக்குத்,

தொலையாத கணம்உண்(டு) உனக்கு,மங் கலகணத்
தொகைஉண்(டு) இவன்தனக்குத்
துளிஅமுதம் உண்(டு)உனக்(கு), இவனுக்கு மாறாத
சொல்அமுதம் உண்(டு), உனக்குக்

கொலைஆ(டு) அராவழிப் பகைஉண்டு கடுவிடம்
கொப்புளிக் கும்,கட்செவிக்
கோள்அரா வைக்கொத்தி எறியும்,மே காரம்,இக்-
குமரனுக்(கு) உண்டுகண்டாய்,

அலைஆழி சூழ்திருச் செந்தில்வடி வேலனுடன்
அம்புலி ஆடவாவே,
அரவின்முடி நெளிய,மயில் முதுகில்வரு குமரனுடன்
அம்புலி ஆடவாவே. (63)

*

Koviloor Digital Library

7. அம்புலிப் பருவம்:

வானத்தில் உள்ள நிலவை (அம்புலியை)க் குழந்தையுடன் விளையாட வருமாறு, செவிலி (வளர்ப்பு)த் தாயர் முதலியோர் அழைக்கின்ற பருவம். இது பதினைந்தாம் மாதத்தில் நிகழ்வது.

நிரம்பாத கலை – குறைந்த சந்திரக் கலை; உனக்கு – சந்திரனாகிய உனக்கு; நிறை கலை – நிறைந்த கல்வி, (புலமை); இவன் தனக்கு – முருகனுக்கு; களங்கம் அருகு உற – குற்றம் பக்கத்தில் பொருந்த, (மாசு என்று சொல்லப் பெற); மான் – முயலகன் என்னும் மான்; குறமான் – குறப் பெண்ணான வள்ளி; கருத்து – கவனம், விருப்பம்; தொலையாத – எண்ணில் அடங்காத, அளவற்ற; கணம் – விண்மீன், நட்சத்திரம், கணத்தொகை – சிவகணங்களின் தொகுதி, (கூட்டம்); துளி அமுதம் – அமுதத் துளி; சொல் அமுதம் – சொல்லாகி அமிர்தம்; கொலை ஆடு – கொலை செய்கின்ற, (பிற உயிர்களைக் கொல்கின்ற); அரா வழிப் பகை – பாம்பின் மூலமான பகைமை, (இராகு. கேதுக்களால் நீ தீண்டப் பெறுவதுண்டு); கடுவிடம் – கடுமையான நஞ்சு; கொப்புளிக்கும் – கக்குகின்ற, பொங்குகின்ற; கட்செவி – கண்ணே செவியாக உடைய (பாம்பு); (''கறைஅணல் கட்செவிப் பகுவாய்ப் ... பாம்பு'' – விடம் பொருந்திய மேல் வாயையும், கண்களாகிய காதுகளையும், பிளந்த வாயையும் உடைய ...... பாம்பு என்கிறது ஒன்பதாந் திருமுறை); கோள் – வலிமை; அரா – பாம்பு; மேகாரம் – மயில்; அம்புலீ – சந்திரனே; ஆட வாவே – விளையாட வாராய்; அரவின் முடி நெளிய – மயிலின் கால்களால் மிதியுண்டு பாம்பின் தலை நெளிய.

(களங்கமற்ற கந்தவேளுடன், அம்புலி! ஆட வாராய்.)

Koviloor Digital Library

8. சிறுபறைப் பருவம்

அறம்தரு புரந்தரா தியர்உலகில், அரமகளிர்
ஆடு,மணி ஊசல்,சிற்றில்,
அம்மனை, கழங்குபல செறியும் தடஞ்சாரல்
அருவிபாய் பரங்கிரியும்,உட்-
புறம்தரு புனிற்றுவெள் வளை,கடல் திரைதொறும்
பொருதசீ ரலைவாயும்,மென்
போதுகமழ் திருவாவி னன்குடியும், அரியமறை
புகலும்ஏ ரகமும்,இனிமைக்
குறம்தரு கொடிச்சியர் பெருங்குரவை முறைகுலவு
குன்றுதோ றாடலும்,தண்
கொண்மூ முழங்குவது கண்(டு),இனம் எனக்,கரட
குஞ்சரம் பிளிறும்அரவம்
சிறந்தபழ முதிர்சோலை மலையும் புரந்தநீ,
சிறுபறை முழக்கிஅருளே,
செருவில்எதிர் பொருத,பர நிருதர்குல கலகனே!
சிறுபறை முழக்கி,அருளே.

❋

Koviloor Digital Library

8. சிறுபறைப் பருவம்:

குழந்தை சிறுபறை (கொட்டு) முழக்குகின்ற பருவம். பத்தொன்பதாவது திங்களில் நிகழ்வது.

அறம்தரு - தருமத்தைச் செய்கின்ற; புரந்தராதியர் - இந்திரன் முதலியோர்; (புரந்தரன் - இந்திரன்); அரமகளிர் - தெய்வப் பெண்கள்; ஊசல் - ஊஞ்சல்; சிற்றில் - சிறுவீடு, மணல் வீடு; அம்மனை - அம்மானை - மகளிர் விளையாட்டு; கழங்கு - கழற்சிக்காய், மகளிரின் ஒரு விளையாட்டு; செறியும் - சேர்ந்திருக்கும்; தடஞ் சாரல் - விசாலமான மலைப்பக்கம்; பரங்கிரி - திருப்பரங்குன்றம் (முதற் படைவீடு); புனிறு - இளமையை உடைய; வெள்வளை - வெண்மையான சங்கு; திரை - அலை; பொருத - (கொண்டு வந்து) தள்ளப்பெறும்; சீரலைவாய் - சிறந்த திருச்செந்தூர் (இரண்டாவது படைவீடு);மென் போது-மென்மையான மலரும் பருவத்து அரும்பு; கமழ் - (நறுமணம்) கமழ்கின்ற; திருவாவினன்குடி - பழனி (மூன்றாவது படைவீடு); அரிய மறை - அரிய வேதம்; புகலும் - கூறுகின்ற, ஓதுகின்ற; ஏரகம் - திருவேரகம், (சுவாமி மலை - நான்காவது படைவீடு); குறம் தரு - குறி சொல்கின்ற; கொடிச்சியர் - குறத்தியர்;(இக்குறத்தியர் சொல்லும் குறிகள் பற்றிப் பட்டியல் இடும் திரிகூட ராசப்பக் கவிராயர் "காலமுன் போம்குறி கைப்பல னாம்குறி, மேல்இனி வரும்குறி வேண்டுவார் மனக்குறி, மெய்க்குறி கைக்குறி விழிக்குறி மொழிக்குறி .." (திருக்குற்றாலக் குறவஞ்சி) - சென்ற காலத்தின் குறி, தற்போது உடனே பலிக்கும் குறி, அதற்கு மேல் வருபவற்றைக் குறிக்கும் குறி, கேட்கின்றவர்களின் மனத்தில் எண்ணியவற்றைக் கூறும் குறி, உடற்குறி, கைக்குறி, விழிக்குறி சொற்குறி என அடுக்கிக்

Koviloor Digital Library

கொண்டே போகிறார்.); குரவை - ஏழு மங்கையர் கைகோத்து ஆடுதல்; (''நங்கைமார் குரவைஒலிப் பொங்குமா கடலே.'' என்கிறது திருக்குற்றாலக் குறவஞ்சி. மங்கைமார் குரவைக் கூத்தாடுகின்றதால் உண்டாகும் பேரொலி, அலை எறிந்து குதிக்கும் கடலின் ஒலிபோல் கேட்கும்); குலவு - விளங்குகின்ற; குன்றுதோறாடல் - முருகன் குடிகொண்டிருக்கும் மலைகள் (ஐந்தாவது படைவீடு); தண் - குளிர்ச்சி; கொண்மூ - மேகம்; முழங்குவது கண்டு - குமுறுவது கண்டு; இனம் என - தன் யானை இனம் என்று எண்ணி; கரட குஞ்சரம் - மதயானை; பிளிறும் அரவம்-முழங்கும் (ஒலிக்கும்) ஓசை; பழமுதிர்சோலைமலை - திருமாலிருஞ் சோலை, (அழகர்மலை - ஆறாவது படைவீடு); புரந்த- காத்த; சிறுபறை - சிறு கொட்டு; செரு - போர்; எதிர்பொருத - எதிர்த்து நின்ற; பர நிருதர் - அன்னியரான அசுரர்; குல கலகனே - (அவுணர்) குலத்துடன் கலகம் செய்பவனே (இப்பாடலில் ஆறுபடைவீடுகள் குறிப்பிடப் பெறுகின்றன.)

(ஆறுபடை வீட்டில் அமர்ந்தருளும் அண்ணலே சிறுபறை முழக்கி அருள்வாய்.)



Koviloor Digital Library



Koviloor Digital Library

9. சிற்றிற் பருவம்

பொய்யா வளமை தரும்,பெருமைப்
பொருநைத் துறையில் நீராட்டிப்,
பூட்டும் கலன்கள் வகைவகையே
பூட்டி, எடுத்து முலைஊட்டி,

மெய்யால் அணைத்து, மறுகுதனில்
விட்டார் அவரை வெறாமல்,உனை
வெறுக்க வேறு கடனும்உண்டோ?
விரும்பிப் பரலைக் கொழித்(து)எடுத்துக்,

கையால் இழைத்த சிற்றிலை,நின்
காலால் அழிக்கை கடனலகாண்,
காப்பான் அழிக்கத் தொடங்கில்,எங்கள்
கவலை எவரோ(டு) இனிஉரைப்போம்,

ஐயா! உனது வழிஅடிமை,
அடியேம் சிற்றில் அழியேலே,
அலைமுத்(து) எறியும் திருச்செந்தூர்
அரசே! சிற்றில் அழியேலே. (93)

*

Koviloor Digital Library

9. சிற்றிற் பருவம்:

சிறுமியர் சிறு வீடு கட்டி விளையாடும்போது, அதனைச் சிறுவர், தம்காலால் அழித்துக் கெடுத்தலைக் கூறுகின்ற பருவம். இது பதினேழாம் திங்களில் நிகழ்வது. (ஏனோ இந்நூலில், இது சிறுபறைப் பருவத்தை அடுத்து அமைந்துள்ளது.)

பொய்யா - தவறாத, கெடுதல் இல்லாத; வளமை – பொலிவு, வளப்பம்; பொருநை - தாமிரபருணி ஆறு; துறை - நீராடும் ஆற்றுத்துறை; கலன் - ஆபரணம், அணிகலன்; முலைஊட்டி - பாலூட்டி; மெய் - உடல்; மறுகு - தெரு; வெறாமல் - வெறுக்காமல், கோபிக்காமல்; கடன் - காரணம்; பரல் - பருக்கைக் கல்; கொழித்து – தெள்ளி; இழைத்த - கட்டிய, அமைத்த; சிற்றில் – சிறு வீடு, மணல் வீடு; கடனல - முறையன்று; இனி – இப்போது, இனிமேல்; வழியடிமை - தலைமுறை தலைமுறையாக (உனக்கு) அடிமைகள் (ஆகிய); அடியேம் - அடியவர்களாகிய எங்களின்; அழியேலே – சிதைக்காதீர், அழிக்காதீர்.

(காக்கும் கடவுளே! கந்தா! வழிவழியாக உனக்கு அடிமை பூண்ட எங்களுக்கு இன்னருள் புரிந்து, இனிது காத்தருள்வாய்.)



Koviloor Digital Library

10. சிறுதேர்ப் பருவம்

ஆதிநூல் மரபாகி, அதன் உறும் பொருள்ஆகி,
அல்லவை அனைத்தும் ஆகி,
அளவினுக்(கு) அளவாகி, அணுவினுக்(கு) அணுவாய்,
அனைத்(து)உயிரும் ஆகி, அதனின்

சாதியின் பிரிவாகி, வெவ்வேறு சமயங்கள்
தானாகி, நானா கி,மெய்ச்
சாலோக, சாமீப, சாரூப சாயுச்ய
தன்ஒளியி லீலை ஆகி,

ஓதிய(து) அனைத்திலும் அடங்காமல் வே(று)ஆகி,
உள்ளும் புறம்பும் ஆகி,
ஒளியில்ஒளி ஆகி,மற்(று) இரவுபகல் அற்றஇடம்
ஒப்புவித்(து), எனை இருத்தித்,

தீதினை அகற்றி,நின் திருவருள் புரிந்தவா!
சிறுதேர் உருட்டி அருளே,
சேவற் பதாகைக் குமார கம்பீரனே!
சிறுதேர் உருட்டி அருளே. (98)

✱

Koviloor Digital Library

10. சிறுதேர்ப் பருவம்:

சிறுவர், சிறுதேர் உருட்டி விளையாடும் பருவம். 21-ஆம் திங்களில் நிகழ்வது.

ஆதிநூல் - மறை, வேதம்; மரபு - முறை; ஊறும் - சாரமாகிய; சமயம் - மதம்; சாலோகம் - கடவுளது உலகத்தில் இருத்தல்; சாமீபம் - கடவுளின் அண்மையில் இருத்தல்; சாரூபம் - கடவுளின் உருப்பெற்றிருத்தல்; சாயுச்யம் - கடவுளோடு ஒன்றுபட்டு இருத்தல்; (இந்த நான்கும், நால்வகை முத்தி நிலைகளாகும்.); இலீலை - திருவிளையாடல்; இருத்தி - இருக்கச்செய்து; பதாகை - கொடி; கம்பீரன் - செருக்குடையவன், பெருமையுடயவன்.

(எல்லாமாய் விளங்கும் இறைவா! எங்களுக்கு இன்னருள் புரிந்த முருகா! சிறுநடை நடந்து சிறுதேர் உருட்டி அருள்வாய்.)



Koviloor Digital Library

நூற்பயன்

மரு,நாள் மலர்ப்பொழில் உடுத்ததடம் எங்கும்,அலை
வாய்கொழித்(து) எறியும்முத்தை,
வண்டல்இடும் எக்கர்புடை சூழ்திருச் செந்தில்வரு
மயில்வா கனக்கடவுள்,எம்

குருநாதன், ஒருதெய்வ யானைதன் பாகன்,
குறக்கொடிக் கும்,தழைசிறைக்
கோழிக் கொடிக்கும் குமார கம்பீரன்,
குறும்பிறை முடிக்கும்பிரான்

இருநாழி நெற்கொண்டு, முப்பத்தி ரண்(டு)அறமும்
எங்கும்முட் டா(து)அளக்கும்
இறைவிதிரு முலைஅமுதம் உண்டு,ஞா னம்பெருகும்
எம்பிரான், இனியபிள்ளைத்

திருநாமம் எழுதுவார், கற்பார், படிப்பார்,
செகம்பொது அறப்புரந்து,
தேவாதி தேவரும் பரவு சா யுச்சியச்
சிவபதத்(து) எய்துவாரே. (3)

மங்களம்.

Koviloor Digital Library

நூற்பயன் :

மரு - நறுமணம் (மிக்க); நாள் மலர் - அன்றலர்ந்தமலர் (நிறைந்த); பொழில் - சோலை; தடம் - தடாகம், குளம்; அலைவாய் - கடல்; வண்டல் - மகளிரின் ஒரு விளையாட்டு; எக்கர் - மணல்மேடு; புடைசூழ் - பக்கத்தில் கொண்ட; தெய்வயானைதன் பாகன் - தேவசேனா தேவியை ஒரு பக்கத்தில் கொண்டவன்; குறக்கொடி - குறக்குலத்தில் பிறந்த கொடி போன்ற வள்ளி; தழை சிறை - இறகுகள் மிகுந்த; குமார கம்பீரன் - பெருமையுடைய இளையோன்; குறும்பிறை - இளம் பிறைச் சந்திரன்; குறும்பிறை பிரான் - பிறைச் சந்திரனைச் சடையில் தரித்திருக்கும் எப்பொருட்கும் இறைவனான சிவபரம்பொருள் (வழங்கிய); நாழி - நான்கு உழக்குக் கொண்டது; முட்டாது - குறைவுபடாது; அளக்கும் - நியதி செய்தல்; இறைவி - உமாதேவி; ("இருநாழி .. இறைவி" - எல்லா அறங்களையும் காஞ்சி மாநகரில் செய்ய வேண்டும் என்று உமையம்மை கேட்டபோது, அறங்கள் யாவற்றையும் வளர்த்தற்கு மூலமாகச், சிவபெருமான் இருநாழி (இகத்தைப் பற்றிய அறங்களுக்கு ஒரு நாழியும், பரத்தைப் பற்றிய அறங்களுக்கு ஒரு நாழியுமாக இரு நாழி) நெல் அளித்தனர்; அம்மையார்; புண்ணியத் திருக்காமக் கோட்டத்தில் வீற்றிருந்து, முப்பத்திரண்டு அறங்களையும் புரிந்தருளினர் என்று சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தில் கூறுகிறார்); அமுதம் - (இங்கு), பால்; எம்பிரான் - முருகன்; செகம் - சகம் - உலகம்; பொதுஅறப் புரந்து - தனக்கே உரிமையானதாகக்

Koviloor Digital Library

காத்து; பரவு - துதிக்கின்ற; சாயுச்சியச் சிவபதம் - சிவ பக்தர்கள், தத்தம் பரிபாகத்திற்கு ஏற்ப அடையும் நால்வகைச் சிவபதவிகளில் நான்காவதான 'தானாகுதல்' என்னும் நிலை.

(செந்திற் குமரனின் திருப்பெயரைச் செப்புவோர், கற்போர், இறையருளில் திளைத்து இன்புறுவர்.)

இத்தொகுப்பிற்கு உதவிய தலையாய நூல்:

திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்

அரும்பொருள் விளக்கவுரை:

பேராசிரியர் பு. சி. புன்னைவனநாத முதலியார்

கழக வெளியீடு.

கோவிலூர் மடாலயம்
KOVILOOR MADALAYAM

நன்றி!

—*—

எங்கள் அருமை அம்மானின் திருமணத்திற்கு வந்திருந்து வாழ்த்திய சான்றோர்களுக்கும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய ஆன்றோர்களுக்கும், திருமணத்திற்கு பேருதவியாயிருந்த உற்றார் உறவினர்க்கும், அன்பர்கள், நண்பர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்பு மருகர்கள்,

மு. தெய்வராயன், மு. அழகப்பன்.

Koviloor Digital Library



Koviloor Digital Library

செந்திற் பத்து



ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீரடியா ரெலாம்.